சுற்றறிக்கை கடிதம் :- 02 - 200 /2016

எனது இல :- ETR/J/DPAHP(N)/06/2016
பி.ப.நா.அலுவலகம் (ET&R),
சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு,
385, பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு-10.

06 /12.2016

மாகாண சுகாதார செயலாளர்கள்,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்கள்,
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகள்/ விஷேட இயக்கங்களின் தலைவர்கள்,
மத்திய அமைச்சின் கீழ்வரும் வைத்தியசாலைப் பணிப்பாளர்கள்,
நிறுவனத் தலைவர்கள்

ஸ்ரீ ஜயவர்தனப் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்படும் விஞ்ஞான இளமாணி தாதிய பட்டப்படிப்பைத் தொடர்வதற்கு தாதிய உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளல் - 2017 (பக்கவாட்டான நுழைவு – 11வது தொகுதி)

1. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் விஞ்ஞான இளமாணிப் (தாதி) பட்டப்படிப்புக்கு பக்கவாட்டான நுழைவுக்காக சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு/மாகாண சுகாதார அமைச்சு என்பவற்றில் பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு செய்யப்படும் பரீட்சாத்திகள் 2017 ஜனவரி மாதம் ஆரம்பிக்கும் நான்கு (04) வருட இந்த விஞ்ஞான (தாதிய) இளமாணி பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு 1வது வருட விலக்களிப்புடன் 2வது கல்வி ஆண்டிற்கு இணைத்துக் கொள்ளப்படுவர்.

2. நுழைவுத் தகைமைகள்.

    1. விண்ணப்ப முடிவுத் திகதியில் உள்ளவாறு அரச துறையில் ஆகக்குறைந்தது 05 வருட சேவைகள்.
    2. 2016 டிசம்பர் 20ஆம் திகதிக்கு 45 வயதைவிட குறைவாக இருத்தல்.
    3. மேற்கூறப்பட்ட பல்கலைக்கழகத்தினால் குறிப்பிடப்பட்ட தேர்வு அடிப்படையாக ஒரே தடவையில் க.பொ.த(உ/த)ப் பரீட்சையில் உயிரியல் (விலங்கியல், தாவரவியல்), இரசாயணவியல் மற்றும் பௌதீகவியலில் சித்தியடைந்திருத்தல்.
    4. க.பொ.த(சா/த)ப் பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக்குறைந்தது திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல்.
    5. தாதி உத்தியோகத்தர் ஒருவராக இலங்கை தாதிய சபையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் / டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.
    6. தெரிவு செய்யப்படும் கல்வித்துறைக்கான உரிய உடல் தகுதிப்பாட்டினைக் கொண்டிருத்தல்.

3. விண்ணப்பங்கள்.

விண்ணப்பங்கள் இதில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு, மத்திய அமைச்சு நிறுவனங்களாயின் நிறுவனத் தலைவரினாலும் அல்லது மாகாண சுகாதார அமைச்சு என்றால் பிராந்திய பணிப்பாளர், மாகாணப் பணிப்பாளர்களாலும் முறையாக உறுதிப்படுத்தப்பட்டு நிறுவனத் தலைவரினூடாக அல்லது மாகாண சுகாதார பணிப்பாளர் ஊடாக 2016 டிசம்பர் 20ஆம் திகதிக்கு முன்னர் அல்லது அன்று அடையக்கூடியவாறு பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கல்வி, பயிற்சி, ஆய்வு), ''சுவசிறிபாய'', இல.385, வண பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு -10. எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். சரியாக பூர்த்தி செய்யப்படாத அல்லது முடிவு திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல்

மூலையில் "விஞ்ஞான மானி தாதிய பட்டப்படிப்பு பாட நெறிக்கு சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பம்" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

4. பரீட்சை

விண்ணப்பதாரிகள், இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் நடார்த்தப்படும் கோட்பாடு மற்றும் வாய்மொழியிலான அம்சங்கள் அடங்கிய தெரிவு பரீட்சை ஒன்றுக்கு தோற்றுவதற்கு வேண்டப்படுவர்.

5. சேவை ஒப்பந்தங்கள்

தாதிய பட்டப்படிப்பை பயில்வதற்காக தெரிவு செய்யப்படும் பரீட்சாத்திகளுக்கு மூன்று வருடங்களுக்கு சம்பளத்துடனான லீவு அனுமதிக்கப்படுவதுடன் அவர்கள் முறைப்படி குறித்த பட்டப்பயிற்சி நெறியை பூர்த்தி செய்வதற்கும், பட்டப்படிப்பை படித்து முடித்த பின்னர் 08 வருட காலம் சுகாதார அமைச்சு / மாகாண சுகாதார அமைச்சில் பணியாற்றுவதற்குமாக ரூபா 600,000.00 தொகைக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் / மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்துடம் பிணைப்பத்திரம் ஒன்றில் கையொப்பமிடுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட பரீட்சாத்தி ஒருவர் குறித்த சொல்லப்பட்ட பாடநெறியை பூர்த்தி செய்வதற்கு அல்லது பிணை மற்றும் ஒப்பந்தம் தொடர்பாக சுகாதார அமைச்சினால் / மாகாண சுகாதார அமைச்சினால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு தவறும் சந்தர்ப்பத்தில், அத்தகைய பரீட்சாத்திகளுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எவ்வாறாயினும், இந்தப் பயிற்சியின் பயனாக, பரீட்சாத்திகள் உயர் பதவி ஒன்றினை கோருவதற்கான உரிமையை கொண்டிருக்க மாட்டார்கள். மேலும், பயிற்சி நெறியை பூர்த்தி செய்துள்ள பயிற்சியாளர்களை உயர் பதவி ஒன்றுக்கு திணைக்களத்தினுள் உள்ளீர்ப்பு செய்தல் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் நியமிப்பு அதிகாரியின் தற்துணிவு அதிகாரம் என்பவற்றில் தங்கியுள்ளது.

6. இச்சுற்றறிக்கையின் விபரத்தை உமது நிறுவனத்தின் / மாகாணத்தின் / பிரதேசத்தின் சுகாதார சேவை பணிப்பாளர் பகுதிகள் / இயக்கங்களின் சகல தகைமையுடைய தாதிய உத்தியோகத்தர்களின் அவதானத்திற்கு கொண்டுவரப்படுவதை உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும்.

அனுர ஜயவிக்ரம,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு.

Anura Jayawickrama
Secretary
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha.
Colombo 10, Sri Lanka.

பிரதிகள்:-

1. பீடாதிபதி, மருத்துவ விஞ்ஞான பீடம். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.
2. பிரதி பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II - ஒப்புதல்/உடன்படிக்கை தயாரிப்பதற்கு
3. பணிப்பாளர் (நிர்வாகம்) I
4. பயிற்சி நெறி ஒருங்கிணைப்பாளர் -B.Sc. தாதியர் பயிற்சி நெறி, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
5. பிரதம சட்ட அலுவலர், சுகாதார அமைச்சு.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் விஞ்ஞான இளமானி தாதி பட்டப்படிப்பை தொடர்வதற்கு தாதிய உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பம் - 2017 (பக்கவட்டான நுழைவு - 11வது தொகுதி)

1. முதலெழுத்தக்களுடன் பெயர்:- ..............................................................................
..................................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:- ..............................................................................
..................................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

3. தாதி உத்தியோகத்தராக முதல் நியமனத் திகதி :- ..............................................
தற்போதைய தரம் :- ..............................................................................

4. முகவரி
அலுவலகம் :- ..............................................................
தனிப்பட்டது :- ..............................................................
தொலைபேசி :- அலுவலகம் :-.................... தனிப்பட்டது :-....................
கைத்தொலைபேசி :- ..................

5. தனிப்பட்ட விபரம்
பிறந்த திகதி :- ...................... தே.அ.அ.இல :- ..........................

6. வயது :- வருடம் ................ மாதம் ............... நாட்கள் ................
(2016 டிசம்பர் 20 ஆம் திகதிக்கு)

7. பால் :- ஆண்/பெண் குடியியல் நிலை :- ..........................

8. கல்வித் தகைமைகள் :-

(I) க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறுகள்
சுட்டிலக்கம் :-...................... வருடம் :-.................

| பாடம் | தரம் |
|---|---|
| 1. .............................. | ............ |
| 2. .............................. | ............ |
| 3. .............................. | ............ |
| 4. .............................. | ............ |

(II) க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள்
சுட்டிலக்கம் :-...................... வருடம் :-.................

பாடம் :- ஆங்கிலம் தரம் :- ...........

9. தொழில் விபரங்கள் :-
தற்போது வசிக்கும் பதவியின் விபரங்கள் :-
பதவியின் பெயர் :- ..............................................................................
நிறுவனம் / திணைக்களம் :- ..............................................................
தற்போதைய நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி :- ..........................
நிரந்தரமானது / ஓய்வூதியமுடையது / ஓய்வூதியமற்றது / தற்காலிகமானது என்பது பற்றிக்குறிப்பிடவும் :- ..............................................................................
சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா :- ........................................
ஆம் எனின், திகதி :- ....................

(III) கடந்த கால தொழில் விபரம் :-

| நிறுவனம் | பதவிப்பெயர் | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| | | | |

(IV) தொழில் தகைமைகள் / ஏனைய தகைமைகள் :-

| பரீட்சை | வருடம் | நிறுவனம் | சித்தி / தரம் |
|---|---|---|---|
| | | | |

10. நீர் எப்பொழுதாவது குற்றவியல் குற்றத்திற்காக சட்டநீதிமன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?
..........................
ஆம் எனில், அத்தகைய குற்றச்சாட்டை பற்றியும், விதிக்கப்பட்ட தண்டனை பற்றியும் குறிப்பிடுக.
..........................................................................................
11. தாதி உத்தியோகத்தர் ஒருவராக இலங்கை தாதிய சபையில் பதிவு இலக்கம் அல்லது டிப்ளோமா சான்றிதழ் பதிவு பதிவு இல :- ..................... திகதி:- .....................

12. விண்ணப்பதாரியின் வெளிப்படுத்தல்

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகின்றேன். ஏதாவது விபரங்கள் பூர்த்தி செய்யப்படாது அல்லது பிழையாக இருக்க காணப்பட்டால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும் அல்லது அது பின்னர் தெரியவந்தால் எனது மாணவராக இருக்கும் நிலை நீக்கப்படும் என்பதையும், பிணை மற்றும் உடன்படிக்கையின்படி கட்டணங்கள் மற்றும் ஏனைய செலவுகள் எது பொருத்தமானதோ அதனை அறவிடுவதற்குமான பொறுப்புடையேன் என்பதையும் நான் நங்கு அறிவேன்.

இப்பயிற்சியின் பயனாக உயர்பதவி ஒன்றை கோருவதற்கு உரித்துடையவர் அல்ல என்பதையும் நான் அறிவேன். நான் இந்தபாடநெறியை பூர்த்தி செய்தாலும், திணைக்களத்திலிருந்து மேலதிக நலங்களை கோருவதற்கு உரித்துடையவர் அல்ல என்பதையும் நான் நன்கறிவேன்.

நான் மேற்படி பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டால் விளம்பரத்தில் குறிப்பிட்டவாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் / சம்பந்தப்பட்ட மாகாணசபை செயலாளருடன் ஒப்பந்தம் மற்றும் பிணை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் நான் நங்கு அறிவேன்.

................ ..................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

நிறுவன தலைவரின் சான்றிதழ்:-

திரு/திருமதி/செல்வி :- ............................................. (பதவிப் பெயர்) ............ ........................ அவர்களால் இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள 01 இருந்து 11 வரையான விடயங்கள் சரியானவை என்றும், அவர் / அவளுடைய வேலை மற்றும் நடத்தை ..................................., என்றும், அவர் / அவள் தெரிவு செய்யப்பட்டால், அவர் / அவளை மூன்று (03) வருடங்களுக்கு தாதிய பட்டப்பாடநெறியில் B.Sc பட்டத்தை தொடர்வதற்கு விடுவிக்க முடியும் என்றும் சான்றுரைக்கின்றேன்.

.................
திகதி

...................................
நிறுவன தலைவரின் ஒப்பம்
(உத்தியோக பூர்வ இலட்சினை)

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் (மாகாண விண்ணப்பதாரிகள் தொடர்பில்) சான்றிதழ் :-

திரு/திருமதி/செல்வி :- ............................................. (பதவிப் பெயர்) ............ ........................ அவர்களால் இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள 01 இருந்து 11 வரையான விடயங்கள் சரியானவை என்றும், அவர் / அவளுடைய வேலை மற்றும் நடத்தை ..................................., என்றும், அவர் / அவள் தெரிவு செய்யப்பட்டால், அவர் / அவளை மூன்று (03) வருடங்களுக்கு தாதிய பட்டப்பாடநெறியில் B.Sc பட்டத்தை தொடர்வதற்கு விடுவிக்க முடியும் என்றும் சான்றுரைக்கின்றேன்.

.................
திகதி

...................................
பி.சு.சே.பணிப்பாளரின் (RDHS) ஒப்பம்
(உத்தியோக பூர்வ இலட்சினை)

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் (மாகாணங்களிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு) சான்றிதழ்:-

திரு/திருமதி/செல்வி :- ............................................. (பதவிப் பெயர்) ............ ........................ அவர்களால் இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள 01 இருந்து 11 வரையான விடயங்கள் சரியானவை என்றும், அவர் / அவளுடைய வேலை மற்றும் நடத்தை ..................................., என்றும், அவர் / அவள் தெரிவு செய்யப்பட்டால், அவர் / அவளை மூன்று (03) வருடங்களுக்கு தாதிய பட்டப்பாடநெறியில் B.Sc பட்டத்தை தொடர்வதற்கு விடுவிக்க முடியும் என்றும் சான்றுரைக்கின்றேன்.

.................
திகதி

...................................
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஒப்பம்
(உத்தியோக பூர்வ இலட்சினை)